Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 167

சனிக்கிழமை
11 மே 2024

சித்திரை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"வீட்டுக்கொரு மரம் நடுவோம் எண்டதை உவையள் பிழையா விளங்கி வீட்டுக்கொரு கஞ்சா வளர்த்திருக்கினம் போல "

# வெப்பச்சாவு அதிகரிப்பு; மக்களே அவதானம்!!



## நேற்றும் ஒருவர் உயிரிழப்பு

**யாழ்ப்பாணம், மே 11**

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் உயிரிழப்புகளும் தொடர்ச்சியாகப் பதிவாகத் தொடங்கியுள்ளன. புன்னாலைக்கட்டுவனில் நேற்றுமுன்தினம் ஒருவர் உயிரிழந்த நிலையில் மற்றுமொருவர் கடும் வெப்பம் காரணமாக நிலத்தில் விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் ஆண்டவர் தோட்டம், அல்வாய் கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

11

## பொலிஸார் விரட்டிச்சென்ற இளைஞர் மின்கம்பத்துடன் மோதி உயிரிழப்பு

### பொலிஸார் உதைத்ததாலேயே விபத்து நேரில் கண்ட மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 11

பலாலி போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் விரட்டிச் சென்ற இளைஞர் ஒருவர் புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள மின் கம்பத்துடன் மோதி உயிரிழந்துள்ளார்.

11

## தேர்தலைப் புறக்கணித்து ராஜபக்சக்களுக்கு ஆதரவா?

### முன்னணியிடம் மணிவண்ணன் கேள்வி

கொழும்பு, மே 11

மறைமுகமாக ராஜபக்சக்களின் நிகழ்ச்சி நிரலை வெல்ல வைப்பதற்காகவா ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்கின்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி? - இவ்வாறு யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்கிட்டுள்ளார்கள். தேர்தலில் வெற்றி பெற்ற சிங்களவர்கள் தமிழ் மக்களுக்குத் தீர்வை முன்வைக்க முயற்சிக்கவில்லை.

11

## உடுத்துறையில் குடும்பப் பெண் கழுத்து நெரித்துக் கொலை

யாழ்ப்பாணம், மே 11

உடுத்துறையில், வீட்டின் கழிவறைக்கு முன்பாக உயிரிழந்த நிலையில் நேற்று அதிகாலை பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்த நிலையில் அவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளாரென உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

உடுத்துறை வடக்கு தாளையடியைச் சேர்ந்த, 3 பிள்ளைகளின் தாயான, ஜெகசீலன் சங்கீதா

11

## டயானாவுக்கு எதிராக ஐ.ம.ச.வும் நடவடிக்கை

கொழும்பு, மே 11

டயானா கமகேவுக்கு இரட்டைக் குடியுரிமைகூட இல்லை. அவர் வெளிநாட்டுப் பெண். சட்டவிரோதமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுள்ளார்.

11

யாழ். மாவட்ட

## நுகர்வோர் அதிகாரசபை வழக்கு; தண்டமாக 10 மில்லியன் ரூபா



யாழ்ப்பாணம், மே 11

2023ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 888 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இவற்றில் 873 முறைப்பாடுகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 10.47 மில்லியன் ரூபா நீதிமன்றத்தால் தண்டப்பணமாக

11

## ஜனாதிபதி ரணிலுடன் பயணிப்பதற்குத் தயார்

### பஸில் அறிவிப்பு



கொழும்பு, மே 11

நாட்டின் நன்மை கருதி ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவுடன் இணைந்து பயணிக்கவும் தயார், தனிவழி செல்லவும் தயார் என்று பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர்

11

சுன்னாகத்தில்

## வீட்டில் கஞ்சாச் செடியை வளர்த்தவர் கைதானார்



யாழ்ப்பாணம், மே 11

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சாச் செடி வளர்த்த நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விசாந்த தலைமையிலான பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்

11

## விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு பாதை: மூன்று வாரங்களின் பின்னரே திறப்பு

யாழ்ப்பாணம், மே 11

ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகள் அண்மையில் திறக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸும், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் (நிர்வாகம்), மேலதிக மாவட்டச் செயலர் (காணி) மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் ஆகியோர் கடந்த 7 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று பார்வையிட்டு பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியதற்கு அமைவாக, இரண்டு வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.

பொன்னாலை - பருத்தித்துறை கடற்கரை வீதியில் பலாலி வடக்கு பாடசாலைக்கு அருகிலும், விமான நிலைய வீதியில் மருதடி சந்தியிலிருந்து பலாலி நோக்கிச் செல்லும் வீரப்பளை வீதியும் திறக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக விமான

11

## சங்கிலி அறுப்பு இருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 11

வழிப்பறியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ள

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வருடாந்தம்

# வீதி விபத்தால் 6,000 பேர் பலி!

## யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல்

யாழ்ப்பாணம், மே 11

இலங்கையில் ஒருவருடத்தில் 6 ஆயிரம் பேர் வீதி விபத்துகளால் இறக்கின்றனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக வடக்கு மாகாணசபையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். நகரில் விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஒரு வருடத்தில் சுமார் 12 ஆயிரம் பேர் விபத்துகளால் இறக்கின்றனர். அதிலும் 6 ஆயிரம் பேர் வீதி விபத்துகளால் இறப்பது மிகவும் கவலைக் குரியது.

பாதுகாப்பான வீதிப் பயணத்தை ஏற்படுத்துவதற்கா கப் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தவுள்ளோம். இதன் முதற்கட்டமாக விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வு யாழில் நடத்தப்படுகின்றது. நாளுக்குநாள் அதிகரித்துவரும் வீதி விபத்துகளைக் குறைப்பதற்கா கப் பொதுமக்கள் அனைவரும் போக்குவரத்து விதி முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். வாகனங்க ளைச் செலுத்தும்போது வேகக்கட்டுப்பாட்டைப் பின் பற்றுவது அவசியம் - என்றார். (ம-66)



# வீதிப் பாதுகாப்பை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நடைபயணம்!

யாழ்ப்பாணம், மே 11

**வீதிப் பாதுகாப்பை வலியுறுத்தி பல தரப்பினரின் பங்குபற்றலுடன் யாழ்ப்பா ணத்தில் நேற்றுமுன்தினம் நடைபவனி முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருபகுதி யாக, வடக்கு மாகாணசபையின் ஏற்பாட்டில், 'வீதிப் போக்குவரத்து நடைமுறைகளைக் கடைப்பிடித்து பெறுமதிமிக்க உயிர்களைக் காப்போம்' எனும் தொனிப்பொரு ளில் இந்த விழிப்புணர்வு நடை பவனி முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாணப் பிர தம செயலாளர் எல். இளங்கோ வன், வடக்கு மாகாண உள்ளூ ராட்சி அமைச்சின் செயலாளர் செ. பிரணவநாதன், வடக்கு மாகாண மோட்டார்வாகன போக்கு வரத்துத் திணைக்கள ஆணையா ளர் திருமதி சுஜிவா சிவதாஸ், யாழ். மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன், யாழ். போதனா மருத் துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த. சத்திய மூர்த்தி, யாழ். மாநகரசபையின் ஆணையாளர் ச. கிருஷ்ணேந்தி ரன், யாழ்ப்பாணம் பிரதேச செய லாளர் சா. சுதர்சன், மோட்டார் வாகனப் பரீட்சகர்கள், துறைசார் அதிகாரிகள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள், தாதிய உத்தியோ கத்தர்கள், யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்கள், போக்குவரத் துப் பொலிஸார் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)



# போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவன் கைது!

ஆவரங்கால் பகுதியில், 70 போதை மாத்திரை களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவன் கைதுசெய்யப்பட்டுள்ளான் என காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசார ணைக்காக அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளார் என்று காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்துள் ளனர். (ப-23)

சாவகச்சேரியில்

# 'யுக்திய'

யாழ்ப்பாணம், மே 11

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் 'யுக்திய' சுற்றிவளைப்பு நடவ டிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோனின் ஆலோச னைக்கு அமைவாக, போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் நோக் குடன் நாடளாவிய ரீதி யில் 'யுக்திய' சுற்றி வளைப்பு நடவடிக்கை இடம்பெற்றுவருகின் றது. இதன் ஒரு பகுதியா கவே சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் யுக் திய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. (ப-27)



மக்லியோட் மருத்துவமனையில்

# மகப்பேற்று மருத்துவத்துக்கான சத்திரசிகிச்சை விடுதிகள் திறப்பு

யாழ்ப்பாணம், மே 11

126 வருடம் பழமை வாய்ந்த இணுவில் மக்லியோட் மருத்துவமனையில், புகழ் பெற்ற மகப்பேற்று மருத்துவர் கெங்கம் மாவின் ஞாபகார்த்தமாக, புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று மருத்துவ சத்திரசிகிச்சை விடுதிகள் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டன.

சத்திரசிகிச்சை நிபுணர் பா. சயந்தன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடை பெற்றன. யாழ்ப்பாணம் மாவட்ட பதில் மாவட்டச் செயலர் ம. பிரதீபன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடத் தொகுதியானது மருத் துவ நிபுணர் பா. சயந்தன் மற்றும் அவ ரது பாரியார் கிருபாளினி ஆகியோரின் சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் விருந்தினர்களாக தென்னிந் திய திருச்சபையின் பேராயர் பத்மதயா ளன், மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக மகப்பேற்று மருத்துவ நிபுணர்களான ஜெ. கஜேந்தி ரன், என். சரவணபவ, வை. சிவாகரன், ஆர். துவாரதீபன் ஆகியோரும், விஷேட அதிதியாக இலங்கை நிர்வாக சேவை யின் உயரதிகாரி பொ. பிறேமினியும் கலந்து சிறப்பித்தினர். (ம-125)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

700 மில்லிகிராம் கஞ்சாவுடன் பொன் னாலை மேற்கில் இளைஞர் ஒருவர் வட்டுக்கோட் டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார். கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய சந் தேகநபர் கைதுசெய் யப்பட்டார். (ம-125)

**விசேட பொதுக் கூட்டம்**
**(புதிய யாப்பை அங்கீகரித்தல் தொடர்பானது)**

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய விசேட பொதுக்கூட்டமானது 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆலய முன் மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் உபயகாரர்கள், பொதுச் சபை உறுப்பினர்கள், அனைவரும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை
செ. கணேசராசா
உப செயலாளர்.

## மோ. சைக்கிள் விபத்து: ஒருவர் படுகாயம்

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து கட்டைக்காடு- முள்ளியான் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மாலை நடந்துள்ளது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினப் படுகொலை: கனடாவில் அஞ்சலிப்பு

**கியூபெக், மே 11**

**தமிழினப் படுகொலை நினைவுநாள் நிகழ்வு கனேடிய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

கியூபெக் தமிழ் சமூக அமைப்பைச் சேர்ந்தவரும், அமைச்சரும், ஸ்காபுரோ தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஹரி ஆனந்தசங்கரியின் ஒழுங்கமைப்பில் கனேடியத் தமிழ் அமைப்புகளின் பங்குபற்றலுடன் கூட்டாக இந்த நிகழ்வு நடைபெற்றுள்ளது. நிகழ்வில் கனேடிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வு நடைபெற்ற மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு நிகழ்வில் கலந்துகொண்ட பெருந்திரளானோர் மலர்வணக்கம் செலுத்தினர்.

தமிழின அழிப்பு நினைவு நாளாக 'மே 18' ஆம் திகதி கனேடிய நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு இரண்டாவது வருடமாக, 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 15 வருட வலி மிகுந்த நினைவுநாளை நினைவுகூரும் விதத்தில் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (ம)

## இயல்புநிலைமை இங்கே இல்லை!

### ரணிலுக்கு சஜித் பதிலடி



கொழும்பு, மே 11

ஜனாதிபதி கூறுவதுபோல நாட்டில் இயல்புநிலை ஏற்படவில்லை. மக்களின் தோள்களில் தாங்க முடியாதளவுக்குப் பொருளாதாரச் சுமைகள் ஏற்றப்பட்டுள்ளமையை பொருளாதார மீட்சி என்று எவ்வாறு கொள்வது? என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"ஜனாதிபதி தனதுரையில், தீப்பற்றி எரியும் ஒரு நாட்டைத்தான் பொறுப்பேற்றுக் கொண்டதாகவும், சிலர் சவால்களை ஏற்காதபோது தான் சவால்களை ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்திருந்தார். அவர் என்னதான் சொன்னாலும் இன்று நாட்டில் இயல்புநிலை ஏற்படவில்லை.

மக்களிடையே அமைதியின்மை நிலவுகிறது. அழுத்தம் உருவாகி, வறுமை அதிகரித்து, வேலையின்மை அதிகரித்து, எரிவாயு, மின்சாரக் கட்டணம் போன்றவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. தொழில்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்துள்ளது.

யுனிசெப், உலக உணவுத்திட்டம் உள்ளிட்ட ஏனைய அமைப்புகளின் அறிக்கைகள், இந்த நாட்டு மக்கள் எதிர்நோக்கும் தாங்கமுடியாத அசௌகரியத்தையும், தாங்கமுடியாத அழுத்தத்தையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. ஜனாதிபதி உருவாகியுள்ளதாகக் கூறும் இயல்பு நிலை, மக்களின் தோள்களில் பெரும் அழுத்தங்களையும் அசௌகரியங்களையும் சுமத்தி, இயல்பு நிலை போலவலிந்து உருவாக்கப்பட்ட செயற்கைச்சூழலே நிலவுகின்றது" - என்றார். (அ-ம-44)

## எயார்லைன்ஸ் சேவை பல மில்லியன் இழப்பு

கொழும்பு, மே 11

கடந்த பத்து வருடங்களில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 4 இலட்சத்து 58 ஆயிரத்து 247 மில்லியன் ரூபாவை இழந்துள்ளது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஸ்ரீலங்கன் விமானச் சேவை மற்றும் விமானநிலையத்தை அரசாங்கத்துக்கு வரி செலுத்தும் நிறுவனமாகவும் மக்களுக்குச் சுமை இல்லாதவாறு முன்னெடுப்பதற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## முஜிபுர் ரஹ்மான்: அரசியல் சாதனை



மக்கள் வாக்குகளாலும், தேசியப் பட்டியல் ஊடாகவும் ஒரே நாடாளுமன்ற தவணையில் இரு தடவைகள் தெரிவாகி புதியதொரு அரசியல் சாதனையைப் படைத்துள்ளார் முஜிபுர் ரஹ்மான்.

டயானா கமகே, குடியுரிமை விவகாரத்தால் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் நாடாளுமன்றப் பதவியை இழந்துள்ளார். அந்த வெற்றிடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக முஜிபுர் ரஹ்மான் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். 2020இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முஜிபுர் ரஹ்மான், கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் மேயர் வேட்பாளராக களமிறங்குவதற்காக நாடாளுமன்றப் பதவியை துறந்தார். இந்த நிலையிலேயே தற்போது மீண்டும் நாடாளுமன்றம் வந்துள்ளார். (ச-44)

## ஐக்கிய மக்கள் சக்தி சட்டபூர்வமான கட்சியே!

கொழும்பு, மே 11

ஐக்கிய மக்கள் சக்தி சட்டபூர்வமான கட்சியாகும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார நேற்று தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸவும் செயலாளராக நானுமே வேட்புமனுவில் கையொப்பமிட்டோம். எனவே, கட்சிக்கு சட்டரீதியில் எவ்வித சவாலும் இல்லை.

டயானா கமகே நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்குத் தகுதியற்றவர் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. ஆதலால், அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆவணங்களில் கையொப்பம் இட்டிருந்தால் கட்சிக்கும் சிக்கல்கள் ஏற்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன தெரிவித்திருந்தார். இதற்கு வழங்கிய பதில் கருத்திலேயே ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார். (ச-44)



## தினம் தெரியுமோ?

பள்ளிக்கூடப் பிள்ளையள் பாவிக்கிற கொம்பாஸுக்குள்ள புட்ரூலர், பாகைமானி, வட்டாரி, செங்கோண முக்கோணி, முக்கோணி, இருகூராக்கி எண்டு ஊரிப்பட்ட சாமான்கள் இருக்கும். அதுக்குள்ள இருக்கிற உந்த இருகூராக்கி ஏன் இருக்கு, எதுக்கு இருக்கு எண்டு கனபேருக்குத் தெரியாது. உண்மையில வட்டாரியில பென்சிலைக் கொழுவி வட்டங்கள், கோடுகள் கீறேக்க பென்சில் சிலவேளை வழுக்கி பிழையா வரப்பாக்கும். அதால சில நுண்ணிய கோடுகள், வட்டங்கள் கீறேக்க, இல்லாட்டி சரியா வரோணுமெண்டால் முதல்ல உந்த இரு கூராக்கியால மெல்லிசா கீறிட்டு அதுக்குப் பிறகு வட்டாரியால கீற ஒரு சொட்டும் பிழைக்காது. இப்பிடி அந்த இரு கூராக்கியை சரியாப் பாவிச்சால் நல்ல பலன் இருக்கு. ஆனால் 99 சதவீதமானவை அந்த இரு கூராக்கி தங்கட கொம்பாஸுக்க ஏன் இருக்கெண்டே தெரியாமல் அதைக் கடைசிமட்டும் பாவிக்காமலே இருக்கினம்.

இப்ப என்னத்துக்கு இஞ்ச இந்த இருகூராக்கியின்ர கதை? சம்பந்தம் இருக்கு. இஞ்சையுள்ள கன உத்தியோகத்தர்மார் ஏன் இருக்கினம், எதுக்கு இருக்கினம் எண்டு அவைக்கும் தெரியாது, சனத்துக்கும் தெரியாது. அந்த உத்தியோகத்தில உள்ளவை தங்கட கடமைப்பட்டியலில உள்ள வேலையளைச் சரியாச் செய்தால் சனத்துக்கு கடும் பிரியோசனம். ஆனால் அப்பிடிச் செய்யிறவை வலு குறைவு. குறிப்பா உந்த சின்னப்பிள்ளையளின்ர விசயங்களைக் கவனிக்கிற, இடைவிலகின மாணவர்களின்ர விசயங்களைப் பாக்கிற உத்தியோகத்தர்மார் மனம் வைச்சு வேலை செய்தால், சிறுவர் துஷ்பிரயோகங்களை நிப்பாட்டலாம், சின்னப்பிள்ளையள் பிழையான வழியில போறதைத் தடுக்கலாம். ஆனால் ஒப்பீஸுக்கு போனமாம், கதிரையில இருந்தமாம், சம்பளத்தை வாங்கினமாம் எண்டு இருந்தால் இருகூராக்கி கொம்பாஸுக்க பத்திரமா இருக்கிறமாதிரி அப்பிடியே எல்லாம் இருக்க வேண்டியதுதான்.

கிட்டடியில தெல்லிப்பழையில ஒரு 16 வயதுப் பெடியன் தன்ர தாயின்ர கழுத்தை நெரிச்சுக் கொலை செய்தவன் எண்ட செய்தியைப் பாத்திருப்பியள். அந்தப் பெடியன் கனநாளாப் பள்ளிக்கூடமும் போகேலை. அப்பிடிப் பள்ளிக்கூடம் போகாட்டி அதைப்பற்றி பள்ளிக்கூடக்காரர் 'சைல்ட் ஒப்பீஸருக்கு' அறிவிச்சிருக்கவேணும். அந்த ஒப்பீஸரும் வந்து திரும்ப அந்தப் பெடியனை பள்ளிக்கூடத்துக்கு கூட்டியந்து படிப்பிக்கிற வேலையைப் பாத்திருக்க வேணும். ஆனால் பள்ளிக்கூடக்காரர் இப்பிடி ஒரு பெடியன் படிக்க வராமல் நிண்டிட்டான் எண்டு அறிவிச்சும் அதுக்குப் பொறுப்பான ஒப்பீஸர் இதைப் பற்றி ஒழுங்கான நடவடிக்கை எடுக்கேலையாம். அப்பிடி அவை தங்கட கடமையைச் சரியாச் செய்திருந்தால், அந்தப் பெடியன் திரும்ப பள்ளிக்கூடம் போயிருப்பான், அதோட அவன்ர தாயின்ர உயிரும் தப்பியிருக்கும். ஒப்பீஸை விட்டு வெளிக்கிடாமல் கதிரையைச் சூடாக்கிறதுதான் தங்கட கடமை எண்டு இருக்கிறவை, தங்கட கடமையளை இனியாவது ஒழுங்காச் செய்வினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 - 2025)

நட்சத்திர மண்டலத்தில் மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம் வரையிலான நட்சத்திரங்கள் சிம்மராசியைச் சேர்ந்தவை. சூரியனை ராசி அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசிக்காரர்கள் தலைமைப்பண்பு கொண்டவர்கள். தன்னை நம்பியவர்களைக் கைதூக்கிவிடவும் எதிர்த்தவர்களை வாழ்நாள் முழுவதும் புறந்தள்ளவும் செய்பவர்கள்.




அப்படிப்பட்ட சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களைக் கொடுக்கும் என்பதைப் பார்ப்போம். இதுவரை 9 ஆம் இடத்தில் அமர்ந்து பதவி, கௌரவம், பாராட்டு, பண வரவு ஆகியவற்றைத் தந்து வந்த குருபகவான் தற்போது 10 ஆம் இடத்துக்குச் சென்று அமர்கிறார். பத்தில் குருவந்தால் பதவியைப் பறிப்பாரே என்கிற கவலையை விடுங்கள்.

வெற்றி வாய்ப்பு தேடிவரும். என்றாலும் அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். உங்கள் திறமையையும், உழைப்பையும் வேறு சிலர் பயன்படுத்தி முன்னேறுவார்கள். எந்த விஷயங்களையும் நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது.

தோல்வி மனப்பான்மையால் மனஇறுக்கம் உண்டாகும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். முக்கியமான கோப்புகளை கையாளும்போது அலட்சியம் வேண்டாம். தன்னம்பிக்கை குறையும். குருபகவானின் பார்வை உங்கள் ராசிக்கு 2, 4, 6 ஆகிய வீடுகளைப் பார்ப்பதால் பல நற்பலன்கள் விளையும். இரண்டாம் வீடான தன குடும்ப வாக்கு ஸ்தானத்தை குருபகவான் பார்ப்பதால் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். நான்காம் வீட்டின் மீது குருபகவானின் பார்வை படுவதால் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். 6 ஆம் வீட்டை குருபகவான் பார்ப்பதால் கடன்களில் ஒருபகுதியை சரி செய்வீர்கள். எதிரிகளின் தொல்லைகளும் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
1.5.24 முதல் 12.6.24 வரை உங்கள் ராசிநாதனான சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் உங்களின் செல்வாக்கு உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். 12.6.24 முதல் 19.8.24 வரை மற்றும் 2.12.24 முதல் 5.4.25 வரை உங்களின் விரைய ஸ்தானதிபதியான சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் அடிக்கடி பதற்றப்படுவீர்கள். முன்கோபத்தால் ஆரோக்கியம் குறையும். 19.8.24 முதல் 2.12.24 வரை மற்றும் 5.4.25 முதல் 14.5.25 வரை செவ்வாயின் மிருகசீரிடம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் திடீர் யோகம் உண்டாகும். கருத்து வேறுபாடால் பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்றுசேர்வீர்கள்.

**வியாபாரம்**
சந்தை நிலைவரங்களை அறிந்து கொள்முதல் செய்யப்பாருங்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். எதிர்பாராத இலாபமும் கிடைக்கும்.

**உத்தியோகம்**
வேலைச்சுமை ஓரளவு இருக்கும். மற்றவர்களின் பணிகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டிவரும். அநாவசியமாக விடுப்புகள் எடுக்கவேண்டாம். போராடிப் படைப்புகளை வெளியிடுவீர்கள்.

**இந்த குருமாற்றம் உங்களுக்கு அனுபவ அறிவைத் தருவதுடன் தன் கையே தனக்குதவி என்பதனைப் புரியவைக்கும்.**

# பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும்

யாழ்ப்பாணம், மே 11
வடக்கு மாகாண இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையாளர் சங்கத்தின் நிர்வாகசபைத் தெரிவுக்கான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு வருட இறுதி ஒன்றுகூடல் மற்றும் ஓய்வுபெற்றவர்களுக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வும் யாழ்.காங்கேசன்துறை வீதியிலுள்ள திவ்ய மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் அ.அற்புதராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 11
கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து ஏற்பாடுசெய்த, குட்டிச்சுட்டி முன்பள்ளியின் விளையாட்டு விழா, முன்பள்ளி முன்றிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி துஷானி சயந்தன், கிளிநொச்சி மாவட்டச் செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களக் கணக்காளர் ப.கஜேந்திரன், ஓய்வுநிலை அதிபர் சண்.வாமதேவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)

# புத்தக தினமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், மே 11
சாவகச்சேரி பிரதேசசபையின் நாவற்குழி பொதுநூலகத்துடன் கந்தையா கனகம்மா நிதியம் இணைந்து நடத்தும் உலக புத்தக தினம், மயூதரனின் 'மனதில் உறுதி வேண்டும்' நூல் வெளியீடு மற்றும் சான்றோர் கௌரவிப்பு நிகழ்வு என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை நாவற்குழி உபஅலுவலகத்திலுள்ள கந்தையா கனகம்மா நினைவாலய அரங்கில் நடைபெறவுள்ளன.
அதிபர் சொ.ஜேசுதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம், ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக மாணவி வி.ரோகிதா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ச-131)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடும். பிள்ளைகள் வழியில் வீண்செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.





**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சி களில் நன்றாகச் சிந்தித்து செயற்படுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாக முடியும்.





**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீண் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். விட்டுப்பிடித்துச் செல்லவும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.





**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நண்பர்கள் பணம் கேட்டு வருவார்கள்.

**விருச்சிகம் :** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். பண வரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.





**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உற்சாகமாக இருப்பீர்கள். தொல்லைகள் நீங்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே உண்டாகும். காரியங்கள் இழுபறியாகும். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது.





**கும்பம்:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

**மீனம்:** அனுகூலமான நாள். தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முள்ளிவாய்க்கால் கஞ்சியும் காஸா நிவாரணமும்

சிங்கள ஸ்ரீலங்கா பௌத்த தேசம், பிரித்தானியரிடமிருந்து விடுதலையடைந்த நாள் முதல் உலகம் முழுவதும் பிச்சை எடுத்தே இந்த நாட்டை ஒப்பேற்றிவருகின்றது. 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து உலகம் முழுவதும் தன் கையை இன்னும் அகல விரித்து தன் யாசகப் படலத்தை பரவலாக்கியுள்ளது ஸ்ரீலங்கா. ஸ்ரீலங்காவின் கண்ணீரைத்துடைக்க முதலாவதாக ஓடிவந்தது அண்டை நாடான பாரத தேசம்தான். எமது தொப்புள் கொடி உறவுகள் உணவுக்காகப் போராடும் போது நாங்களும் எமது பங்குக்கு ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணிய தமிழக அரசு, ஸ்ரீலங்காவுக்கு 5 பில்லியன் டொலர் பெறுமதியான உணவுப்பொருள்களை கப்பலில் அனுப்பி வைத்தது.

தமிழக அரசு எமது உடன்பிறப்புகளுக்கு உதவும் போது நான் மட்டும் பார்த்துக்கொண்டிருப்பதா? என்று யோசித்த தமிழக யாசகரான பால்பாண்டி என்பவர், தான் யாசகம் பெற்றுச் சேமித்து வைத்திருந்த 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவை தன் சார்பிலான நன்கொடையாக வழங்கினார். அவ்வாறு ஒரு யாசகர் வழங்கிய அந்தப்பணம் உட்பட தமிழக அரசு வழங்கிய நன்கொடை தமிழர்களுக்கு மட்டுமல்லாது, சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சேர்த்தே பகிர்ந்து வழங்கப்பட்டது. தாம் வழங்கிய உதவியை மலையக மக்களுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ மட்டும் தான் முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டும் என எந்தக் கோரிக்கையையும் இந்திய அரசோ, தமிழக அரசோ முன்வைக்கவில்லை. ஆனால் பார்வையற்றோருக்கு சிகிச்சை என்ற பெயரில் வந்து காத்தான்குடி முஸ்லிம்களுக்கு மட்டும் சவூதி அரேபியா உதவுகின்றது. நல்லவேளையாக அந்தக் குறுகிய பார்வை தமிழக அரசிடம் இருக்கவில்லை.

இலங்கை மக்களில் 17 வீதமானோர் அல்லது 3.9 மில்லியன் மக்கள் உணவுப்பற்றாக்குறையை தற்போதும் எதிர்கொள்வதாக உலக உணவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இலங்கையில் 2.3 மில்லியன் சிறுவர்கள் உணவுக்காகத் திண்டாடுவதாகவும், இலங்கைச் சிறுவர்களின் பட்டினியைப்போக்க உதவுமாறும் 'யுனிசெப்' எச்சரித்துள்ளது. இந்த எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கும் சமகாலத்தில்தான் ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை காஸாவிலுள்ள மக்களுக்கு நிவாரண நிதியாக ஸ்ரீலங்காஅனுப்பி வைத்துள்ளது. ஐ.நா.வும் 'காலத்தால் செய்த உதவி' என இலங்கையின் உதவிக்கு நன்றி தெரிவித்து பட்டோலை அனுப்பியுள்ளது. அதாவது, தான் உலகெல்லாம் பிச்சை எடுத்த பணத்திலேயே, ஸ்ரீலங்கா அரசு காஸாவுக்கு நிவாரணம் வழங்கியுள்ளது. சொல்லப்போனால் தமிழக யாசகர் பால்பாண்டி அனுப்பிய 5 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் இதில் அடக்கம் என்றும் சொல்லலாம்.

தனது சொந்தமக்கள் முள்ளிவாய்க்காலில் கஞ்சிக்குக் கூட வழியில்லாமல் அவலப்பட்ட வேளையில் தமிழக அரசும் புலம்பெயர் உறவுகளும் அனுப்பிய அத்தியாவசிய மருந்துகளைக் கூட திருப்பி அனுப்பிவிட்டு, அந்த மக்களை உணவின்றி, மருந்தின்றி வதைத்ததும் இதே ஸ்ரீலங்காதான். ஏதுமில்லா நிலையில் கஞ்சியைக் குடித்தாவது உயிர் பிழைக்கும் நோக்கோடு, கஞ்சிவாங்க வரிசையில் நின்றவர்களையும் குண்டு வீசி கொன்றொழித்ததும் இதே ஸ்ரீலங்கா அரசுதான். அப்படிச் சொந்த மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசுக்கு வராத கருணை, காஸா மக்கள் மீது பிறந்ததும், தானே பொருளாதாரத்தில் 'ததிங்கிணத்தோம்' போட்டுக் கொண்டிருக்கையில்கூட, பலஸ்தீனியர்களுக்கு நிவாரணத்தைக் கொடுப்பதும் ஓர் அதிசயம்தான். தனக்குத் தனக்கு என்றால் தான் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்கும், ஆனால் ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரை அது தலைகீழாகி பிறருக்கு மட்டும் படக்குப் படக்கென அடிப்பதன் மர்மம்தான் புரியவில்லை.

நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதென்பது மிகச்சரியானது. அதைத் கொச்சைப்படுத்துவதோ அல்லது சிறுமைப்படுத்துவதோ இந்தப் பத்தியின் நோக்கமல்ல. ஆனால், தன்கையில் படிந்திருக்கும் சொந்த மக்களின் குருதியோடும், தள்ளாடும் பொருளாதாரத்தோடும் தலைகுனிந்து நிற்கும் ஸ்ரீலங்கா, காஸாவுக்கு நிவாரணம் வழங்கும் தகுதியும் வல்லமையும் கொண்டுள்ளதா என்பதுதான் இங்கு மிகப்பெரும் கேள்வியும் விமர்சனமும்...!





# பெரமுனவின் கூட்டணியில் கூட்டமைப்புக்கும் இடமாம்

## அழைக்கின்றார் சந்திரசேன

**கொழும்பு, மே 11**

**பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணையமுடியும் - என்று பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன அழைப்பு விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:- "பெரமுனவின் சலூன் கதவு திறந்தே உள்ளது, எவரும் உள்ளே வரலாம், வெளியே போகலாம். ஐக்கிய தேசியக் கட்சி அல்ல இலங்கையில் உள்ள எந்தக் கட்சி வேண்டுமானாலும் எம்முடன் கூட்டணி வைக்கலாம். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கூட இணையலாம். எமது கட்சியின் கொள்கையை ஏற்று கூட்டமைப்பினர் வந்தால் அதில்கூட எமக்குப் பிரச்சினை இல்லை" - என்றார். (அ-ம-44)



# இந்த வருடத்தில்: 42 துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மே 11

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 42 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 27 பேர் உயிரிழந்துள்ளனர். 17 பேர் காயமடைந்துள்ளனர். 12 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் எந்தவித சேதங்களும் ஏற்படவில்லை. இந்தத் துப்பாக்கிச் சூடுகளில் பெரும்பாலானவை பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான தகராறில் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# ஆட்சேர்ப்பு பரீட்சை

கிளிநொச்சி, மே 11

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு, இலங்கை ஆசிரியர் சேவையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான பிரயோகப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம், 14 ஆம், 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை கிளிநொச்சி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு மற்றும் திறன் விருத்தி நிலையம், கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளதாகவும் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களது முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்களை வடமாகாணசபை இணையத்தளம் www.np.gpv.lk மற்றும் வடமாகாணக் கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரிகளில் பார்வையிடமுடியும் எனவும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# புதிய கிராமஅலுவலர்கள் 10 பேர் தென்மராட்சிக்கு

யாழ்ப்பாணம், மே 11

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் புதிய கிராம அலுவலர்களாக 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் 14 பிரிவுகளில் கிராமஅலுவலர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 பேருக்கு ஜனாதிபதியால் நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (ச-9)

# காணி உறுதி வழங்கல்

நீண்ட காலமாக தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள அரச காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன. எழுதுமட்டுவாழ்,பெரியானோடை, மிருசுவில் வடக்கு உட்பட பிரதேசங்களில் குடியிருப்பவர்களுக்கே காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன. (ம-9)

## நாளை

12.05.2024

ஞாயிற்றுக்கிழமை

சித்திரை - 29

சுபநேரம் : 08.54 - 10.24

ராகுகாலம் : 04.24 - 05.54

## நாளொரு நல்வார்த்தை

தனியாக இருங்கள், அதுதான் கண்டுபிடிப்பின் ரகசியம்
நீங்கள் தனியாக இருக்கும் போது தான் கருத்துகள் பிறக்கின்றன.

- நிகோலா டெஸ்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவ உதவியாளர் தேவை (பெண்)

**அங்கர் பாதுகாப்பு சேவை நிறுவனத்திற்கு பெண் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் தேவை.**

**தகைமை:-**
- **A/L பெறுபேறு**
- **கணினி அறிவு (MS Word, MS Excel)**

ஏற்கனவே வேறு நிறுவனங்களில் கடமை புரிந்திருந்தால் அதன் முன் அனுபவம் கருத்திற் கொள்ளப்படும்.
எமது அலுவலகத்தில் இருந்து 10Km க்கு உட்பட்ட தூரத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் சுயவிபரக்கோவையுடன் நிறுவனத்துக்கு நேரடியாக சமுகமளிக்க வேண்டும்.

**முகவரி :-** அங்கர் பாதுகாப்பு சேவை,
இல: 91/1, சூசையப்பர் வீதி, வேப்பங்குளம், வவுனியா.

**தொ.இல:-** 077 239 2850, 024 222 8169

(CS/55024) J-1

# WE ARE HIRING

## Office Manager (Part time)

**About INVORG**

INVORG is an independent innovation advisory and digital transformation company focused on uplifting communities through innovative digital solutions for Not-for-Profit, charitable, and government organizations. Their team uses emerging technology and a client-centric approach to improve efficiency, drive growth, and align solutions with organizational goals. They design, develop, and implement custom digital solutions tailored to meet clients' specific needs.

**Position Overview**

We are seeking highly motivated and organized;
(Office Manager for the Jaffna, Regional Office)
to join our team. The Office Manager will play a key role in ensuring the efficient operation of our office environment. This individual will oversee administrative tasks, manage office logistics, and support various departments to optimize productivity and efficiency.

**Experienced & skill requirement**

- Bachelor's degree in business administration or related field.
- Preferred Experience in office management/administrative roles.
- Fluency in English and proficiency in Sinhala or Tamil.
- Willingness to travel occasionally.
- Familiarity with IT and proficiency in Microsoft Office.
- Experience in event organizing and coordination.
- Basic understanding of financial concepts.

**The ideal candidate should**

- Supervise and coordinate administrative staff
- Develop and implement office procedures and policies
- Manage office budgets, expenses, and procurement
- Oversee office logistics and space planning
- Coordinate meetings, appointments, and travel arrangements
- Serve as a point of contact for stakeholders
- Facilitate communication between departments
- Maintain office security and safety
- Plan company events and activities

**JOIN US**

**"UPLIFTING COMMUNITIES THROUGH INNOVATIVE DIGITAL SOLUTIONS**

Send your resumes Before May 25th 2024 to:
admin@invorg.com


# பரீட்சை மேற்பார்வையாளர் வவுனியாவில் இடைநிறுத்தம்

வவுனியா, மே 11

வவுனியாவில் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நேரம் முடிவடைவதற்கு முன்னதாக மாணவர்களிடமிருந்து விடைத்தாள்களை பெற்றுக் கொண்டமை தொடர்பில் பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் இடைநிறுத்தப் பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட பாடசாலையில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் முதல் நாள் சமய பாட பரீட்சையின் போது பரீட்சை நிறைவடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் மாணவர்கள் சிலரிடம் விடைத்தாள்கள் பெறப்பட்டதாக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிமனைக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது. முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த வலயக் கல்விப் பணிமனை, பரீட்சை நிலைய மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோகர் ஒருவரை இடைநிறுத்தியுள்ளதுடன், சம்பவத்தின் போது அங்கு உதவி மேற்பார்வையாளராக கடமையாற்றிய வரை மேற்பார்வையாளராக நியமித்துள்ளது. மேலும் புதிதாக உதவி மேற்பார்வையாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-18-110)


## 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்**
**(தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆசிரியர் ஆலோசகர்)**


எமது பாடசாலையில் ஏழு வருடங்கள் வலயப் பிரதிநிதியாக கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய சேவையாற்றியதுடன், சமூகத்தின் மத்தியில் நல்லதொரு பண்பு விருத்திக்கான விழிப்புணர்வை வளர்த்துச் சென்ற அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்
கைதடி மத்தி.

## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 11 . 1930



மறைவு
07 . 05 . 2024

**மகேஸ்வரி மாணிக்கவாசகர்**
**(முன்னாள் உப தபாலதிபர், குரும்பசிட்டி)**

யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி மாணிக்கவாசகர் (முன்னாள் உப தபாலதிபர், குரும்பசிட்டி) அவர்கள் செவ்வாய்க்கிழமை (07.05.2024) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் மாணிக்கவாசகரின் (கூட்டுறவுப் பரிசோதகர்) அன்பு மனைவியும், முன்னாள் யூனியன் கல்லூரி ஆங்கில ஆசிரியர் காலஞ்சென்ற சின்னப்பு - அன்னமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற குகலோஜன், ரேணுகா (சுவர்ணராஜா) சுரேஷ்குமார் (ரதி), தாரிணி (குமாரமூர்த்தி), ரமணிகா (விமலதாசன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், நிஷந்தன் (உமாநந்தினி), நிலக்ஷன் (சஞ்ஜீதா), நிமல்ஷன் (சிந்து), சரண்ஜா (ராஜ்குமார்), தர்ஷனா, ஷர்மிலன், தீபிகா (நுகுஷாந்), ஆரபி (ராகவன்), வர்ணன், நிலோசன் (லோரா), நிகாஷன் (ஃபென்னி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், சுவர்ணன், சுவர்ணமுகி, ராஜன், ரஷ்மி, காலஞ்சென்ற ஸ்ரீராம், மற்றும் ஸ்ரீகிருஷ்ணா, ஆரவ், சத்விகா, சதுர்த்திகா, சர்மிகா, ஆத்ரிஷா, அம்ரிதா ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிஸ்ஸ மஹிந்த மலர்ச்சாலையில் நாளை (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை 3.00 மணியளவில் கல்கிஸ்ஸ மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ரேணுகா சுவர்ணராஜா (மகள்)
மற்றும் குடும்பத்தினர்.

(CS/54983) J-1

## அறிவித்தல்

**வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**பதிவு இல - V / 260 of 9.1.1971**
**கிளைக்குழு தெரிவுக்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டம் - 25.05.2024**

வவுனியா பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் உபவிதி 28/2 இற்கு அமைவாக 27.04.2024ம் திகதி நடைபெறாத பின்வரும் கிளைகளுக்கான கிளைக்குழு தெரிவுக்கான கிளைப்பொச்சபைக்கூட்டம் எதிர்வரும் 25.05.2024ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ் குறிப்பிடப்பட்ட இடங்களில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிளைகள் சார்பில் பொதுச்சபை பேராளர்களுக்கான தெரிவும் இடம் பெவுள்ளது.

| கிளையின்பெயர் | கிளைஇல | காலம் | நேரம் | கிளைப்பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1. வவுனியா மத்தி | 02 | 25.05.2024 | முற்பகல் 10.00 மணி | சங்க தலைமை காரியாலயம் (குட்செட் வீதி) |
| 2. மகாகணபதி ஈச்சங்குளம் | 12 | 25.05.2024 | முற்பகல் 10.00 மணி | ஈச்சங்குளம், கிராமிய வங்கி |
| 3. வவுனியா கிழக்கு | 05 | 25.05.2024 | முற்பகல் 10.00 மணி | பொதுநோக்கு மண்டபம் சின்னப்புதுக்குளம் |
| 4. கயிலை வன்னியன் | 13 | 25.05.2024 | முற்பகல் 10.00 மணி | பூவரசங்குளம் பொதுநோக்கு மண்டாம் |
| 5. கள்ளிக்குளம் | 18 | 25.05.2024 | முற்பகல் 10.00 மணி | சங்க தலைமை காரியாலயம் (குட்செட் வீதி) |

மேற்படி சகல கிளை அங்கத்தவர்களையும் இக்கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ந.சிவகுமாரன்
பொதுச்செயலாளர்,
வவுனியா ப.நோ.கூ சங்கம்
தொ.பே. - 0776745306

(CS 28405) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

பச்சிலைப்பள்ளி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு கரந்தாயிலுள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள் ளது. இதன்போது இனிவரும் மூன்று வருட காலப் பகுதிக் கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெ றும். அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களும் தவறாது சமுகம ளிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (ச)

## கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில் 24.03.1945

அம்பிகை பாதத்தில் 08.05.2024

### உயர்திரு. கந்தையா கந்தசாமி

**(பிரபல வர்த்தகர் கொழும்பு, வவுனியா)**

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலன சபை, திருப்பணிச்சபை முன்னாள் தலைவரும் நீண்ட காலமாக அம்மன் ஆலயத்தின் வளர்ச்சியில் அயராது பாடுபட்ட வருமாகிய கந்தையா கந்தசாமி அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவு அம்பிகையின் அடியவர்கள் அனைவருக்கும் தாங்கமுடியாத பெரும்துயரத்தை தந்துள்ளது.

அன்னாரின் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர் களுக்கும் எமது ஆழ்ந்த துயரத்தை தெரிவிப்பதுடன் இத்துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அவரது ஆத்மா பெருங்குளத்து முத்துமாரி அம்மனின் பாதாரவிந்தங்களை அடைய நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.....

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**வேலணைபெருங்குளம்**
**முத்துமாரி அம்மன்கோவில்**
**பரிபாலன சபையினரும்,**
**திருப்பணிச் சபையினரும்.**

(cs.55015) (N-1)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 21 • 02 • 1936



இறப்பு 11 • 04 • 2024

அமரர்

### இராசலிங்கம் இலட்சுமிப்பிள்ளை

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்


விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி தெற்கு,
இனுவில்.

(CS/55011) J-1

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் • 31 • 03 • 1954



மறைவு • 09 • 05 • 2024

### அண்ணாமலை சந்திரன் (ஆனந்)

கூழாவடி ஒழுங்கை ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை சந்திரன் அவர்கள் கடந்த (09.05.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - பவளம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் சோதி தம்பதியரின் மூத்த மருமகனும், சிவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், உதயராஜன், இந்துகா (கனடா), சாரங்கன் (பிரான்ஸ்), சஞ்சீபன் (பிரான்ஸ்), சுபனேஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லிலோஜினி, துஷியந்தன் (கனடா), கல்பனா ஆகியோரின் அன்பு மாமனாரும், கெவிக்சான், ஜெய்சான் (கனடா), ஜொனவின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (13.05.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தொடர்புகள்: 077 585 2205 (மனைவி)**
**மகன்கள்**
**உதயன் - 070 77 99979**
**சாரங்கன் - 33767632698 (பிரான்ஸ்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 55016) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில் • 16 • 02 • 1933



விண்ணில் • 08 • 05 • 2024

### நாகலிங்கம் செந்திமலர்

மானிப்பாயை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட நாகலிங்கம் செந்திமலர் அவர்கள் கடந்த (08.05.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோகரத்தினம் - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவி யும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், பூபாலசிங்கம், திருஞானவதி மற்றும் சிலோசனாவதி, அற்புதவதி, சந்திராவதி, கமலாவதி ஆகியோரின் சகோதரியும், செல்வமலர் (Germany), லிங்கமலர், தியாகலிங்கம் (Canada), சுந்தரலிங்கம் (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவீந்திரன் (Germany), காராளசிங்கம், ஜெயராணி (Canada) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரஜீவன் (Germany), பிரதீபன் (Germany), ஜித்தோந்திரன் (Germany), மந்தாகினி, லவாகர், கம்சாயினி, கபிலன் (Canada), கஸ்தூரி (Canada), அஜித் (Canada) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**406, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 66 88 338**

(CS 55013) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர்மாற்றம்

கிருஸ்ணா நகர், முழங்காவிலில் வசிக்கும்
**இன்னாசி கிறிஸ்சி** ஆகிய நான் எனது பெயரை
**இன்னாசி கிறேஸ்** என மாற்றம் செய்வதோடு
இனிவரும் சகல ஆவணங்களிலும்
**இன்னாசி கிறேஸ்** என்றே கையொப்பம் இடுவேன்
என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
மக்களுக்கு அறியத்தருகின்றேன்.


(CS/55019) J-1

**இன்னாசி கிறேஸ்**

## மரண அறிவித்தல்

### கிறிஸ்ரலோகஸ் நியூட்டன் ஜெனநாதன்

**(இளைப்பாறிய முகாமையாளர் - NSB)**



**தோற்றம் 30.12.1955 மறைவு 09.05.2024**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், St.Anne's வீதி, பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரலோகஸ் நியூட்டன் ஜெனநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (09.05.2024) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரலோகஸ் - பொன்மலர் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பெலிசியா - மனோறிதி (Nuffield School Kaithady) மற்றும் ஜோதிமலர் ஆகியோரின் பாசமிகு கணவரும், ஆளின் (Australia) அலோய்நிரேஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வெஸ்லி ஜோசெப், அடீலா, ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெரமியின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற வினோதானந்தன் மற்றும் மனோகரன், நவீனன், ஜஸ்மின் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் (22, St.Anne's Road, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்) நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக St.John's ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்:**

**மனைவி** 077 297 9518
**அலோய் - மகன்** 070 613 7080
**ஆளின் - மகள்** +61 430 892 204, 077 222 1242

(CS/55022) J-1

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

**தோற்றம் 12 • 12 • 1945**



**மறைவு 09 • 04 • 2024**

கடந்த 09.04.2024 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் முத்தையா தனபாலசிங்கம்

**(முன்னாள் ஆசிரியர் யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி,**
**முன்னாள் உப அதிபர் யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (09.05.2024) வியாழக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (11.05.2024) சனிக் கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரை இழந்து நாம் தவித்து நின்றபோது எமக்கு ஆறுதல் தந்து சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**320, ஆனந்தன் வடலி வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

(CS/55028) J-1

**குடும்பத்தினர்**
077 843 5024

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு, 1998.05.19ம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட **"வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகள்"** இற்கு அமைவாக, யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளஉ கிறகோரி சந்திரசேகரன் ஆகிய நான், 1983ம் ஆண்டின் 32ம் இலக்கம் மற்றும் 1992ம் ஆண்டின் 11ம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும், 1972ம் ஆண்டின் 5ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 02ம் பிரிவின் கீழ் 2234/39 இலக்க 2021.07.01ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி மூலமாக எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, வரையறுக்கப்பட்ட நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் துணை விதி 23இற்கு அமைய, 21.04.2024ம் திகதியன்று இடம்பெறாத சங்கத்தின் கீழ்க்குறிப்பிட்ட கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும், அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

அதற்கு அமைவாக, **இக் கூட்டங்களிற்கு சமுகமளித்து வாக்களிக்க தகைமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள், சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்கப்பெறாத வாக்களிக்கத் தகைமையுடைய அங்கத்தவர்களும் அன்றைய கூட்டத்திற்கு சமுகமளித்து தங்களின் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

* கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4 ) பங்கினர், அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இதில் இருவர் 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
* இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிக்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
* தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | பொற்பதி | சற்குணசிங்கம் பிரேமிலன் | 2024.05.12 | மு.ப 10.00 மணி | பொற்பதி அறிவாலயம், கொக்குவில் கிழக்கு |
| 2 | 4 | நாகபூசணி | கணபதிப்பிள்ளை செந்தூரன் | 2024.05.12 | மு.ப 10.00 மணி | கோண்டாவில் கிழக்கு சனசமூக நிலையம் |
| 3 | 9 | கொக்குவில் மத்தி | இராஜசிவம் தனுசன் | 2024.05.12 | மு.ப 10.00 மணி | கிளைக்கட்டடம், கொக்குவில் சந்தி |
| 4 | 12 | கொக்குவில் அரசடி | அரியரட்ணம் வசீகரன் | 2024.05.12 | மு.ப 10.00 மணி | கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் |
| 5 | 15 | இராசபாதை | தங்கராசா கண்ணதாசன் | 2024.05.12 | மு.ப 10.00 மணி | கிளைக்கட்டடம், இராசபாதை வீதி திருநெல்வேலி |
| 6 | 17 | கோண்டாவில் கிழக்கு | சண்முகம் சசீந்திரன் | 2024.05.12 | மு.ப 10.00 மணி | அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் கோண்டாவில் கிழக்கு |
| 7 | 21 | பரமேஸ்வராச்சந்தி | கனகரட்ணம் வக்ஷன் | 2024.05.12 | மு.ப 10.00 மணி | சைவகுருமார் அர்ச்சக சபை மண்டபம் திருநெல்வேலி |

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்**
**857, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**2024.04.29**

**ஒப்பம் : கிறகோரி சந்திரசேகரன்**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாதாரண தர மாணவர்கள்

## பரீட்சை இடைவேளையில் நேற்று வீதியில் மோதல்

வவுனியா, மே 11

வவுனியா நகரப்பகுதியில் இரு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று அடிதடியில் ஈடுபட்டனர்.

வவுனியா குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள க.பொ.த. சாதாரண தர பரீட்சை நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது. பரீட்சை நிலையத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சை இடம்பெற்றது. அங்கு பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு பாடத்தின் ஒரு பகுதி நிறைவுற்றதுடன் இடைவேளை வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் பரீட்சை மண்டபத்துக்கு வெளியில் ஒன்றுகூடிய இரு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களுக்குள் கடுமையாக மோதிக்கொண்டனர். அந்தப் பகுதியில் சற்றுநேரம் குழப்பம் நீடித்ததுடன் போக்குவரத்தும் தடைப்பட்டது.

வீதியால் செல்பவர்கள் அங்கு ஒன்று கூடியமையால் மாணவர்கள் அங்கிருந்து கலைந்துசென்றனர். (ஒ-110)


## வேலையாட்கள் தேவை

ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும்
**பலசரக்கு வர்த்தக நிலையம்**
ஒன்றிற்கு பின்வரும் பதவி
வெற்றிடங்களுக்கு **ஆட்கள் தேவை.**

- வாகன சாரதி (Driver)
- பொதி செய்து கொடுத்தல்

விபரங்களுக்கு:
**077 419 5015, 021 221 2770**
(CS/55017) J-1



## வாழ்த்துகின்றேன்



யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வரும், யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடறிந்த மனிதவுரிமை சட்டவாளருமான **மாமனிதர் நடராஜா ரவிராஜ்**, ஓய்வுநிலை ஆசிரியரும், இயங்குநிலை சமூகச் செயற்பாட்டாளருமான **சசிகலா** இணையரின் மகளுமான

**திருமதி பிரவீணா கலையமுதன்**

அவர்கள் சட்டவாளராக கடந்த 03.05.2024 அன்று சிறீலங்கா உயர்நீதிமன்றில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளமையை தென்மராட்சி மக்களின் சார்பாக வாழ்த்துகின்றோம்.
தந்தையின் வழியில் மக்களுக்கு சேவையாற்ற எனது வாழ்த்துக்களும், பாராட்டுகளும்.

Best Wishes

**சமூகசேவையாளர்**
**K.கதிர்காமன் சிவபாதம்**
**குமரநகர் வீதி, கைதடி மத்தி, கைதடி.**



## கண்ணீர் அஞ்சலி

**அமரர் பிரம்மஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள் அரிஹரக்குருக்கள்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.10.1979 | 25.04.2024 |

கைதடி வடக்கு கயிற்றசிட்டிக் கந்தசாமி தேவஸ்தானத்தின் முன்னாள் மகோற்சவக் குருக்களான ஐயாத்துரைக் குருக்கள் அரிஹரக்குருக்கள் அவர்களின் ஆன்மா சாந்தி பெற எல்லாம் வல்ல கயிற்றசிட்டிக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

**7 ஆம் திருவிழா உபயகாரர்கள்,**
**கயிற்றசிட்டிக்கந்தசாமி**
**தேவஸ்தானம்**
**கைதடி**



## காணி விற்பனைக்கு

**சாவகச்சேரி நுணாவில் மேற்கு பேச்சியம்மன்**
கோயில் கண்டி வீதியில் இருந்து
300m தூரத்தில்
**10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**
**இரண்டு பரப்புகளாக பிரித்துக் கொடுக்கப்படும்.**
(CR/42411) J-1

**077 224 7902**


## ஆண்டு நிறைவும் பரிசில் வழங்கலும்

இணுவில் பொது நூலகம் சன சமூக நிலையத்தின் 22ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவும், பரிசில் வழங்கல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.30 மணியளவில் இணுவில் பொதுநூலக மண்டபத்தில் பொதுநூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் பா.ஜெயகரன் பிரதம விருந்தினராகவும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் கெ.இந்திர மோகன், வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சர்மிளா மயூரன், இணுவில் தென் மேற்கு கிராம அலுவலர் ஆ.ரஜீவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-66)


## பகிரங்க அறிவித்தல்
### மயான அபிவிருத்திச் சபை உருவாக்கல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள J/252 பலாலி தெற்கு வயாவிளானில் அமைந்துள்ள பூனையன் காடு இந்து மயானத்திற்கான மயான அபிவிருத்தி சபை உருவாக்கும் பொருட்டான கூட்டம் எதிர்வரும் 2024.05.25 ஆம் திகதி சனிக் கிழமை பி.ப 4.00 மணிக்கு பலாலி தெற்கு (J/252) கிராம அலுவலர் பணிமனையில் நடைபெறவுள்ளதால் பொதுமக்கள் மற்றும் மயானத்துடன் தொடர்புபட்டவர்கள் கலந்து கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.

**சு.சுதர்ஜன்**
**செயலாளர்,**
**வலிவடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**
**2024.05.11**
(CR 42414) A-1



## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி மேரி யூவேமியா ஜோண்பிள்ளை (தி.கு)**

பாசையூரைப் பிறப்பிடமாகவும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி யூவேமியா ஜோண்பிள்ளை தி.கு நேற்று முன்தினம் (09.05.2024) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 14.05.2024 செவ்வாய்க்கிழமை மு.ப 08.00 மணிக்கு யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
**மாகாணத் தலைவி,**
**121, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(CS 00458) S-1



## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28.05.1932 | 08.05.2024 |

**சிவலிங்கம் தேவகுஞ்சரம்**

கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், கதிரிப்பாய் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் தேவகுஞ்சரம் அவர்கள் கடந்த 08.05.2024 புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், திருச்சிற்றம்பலம், காலஞ்சென்றவர்களான பவானந்தம், மகேந்திரராஜா, வைத்திலிங்கம், வடிவாம்பிகை, யோகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதுரைநாயகி (U.K), ஸ்ரீரங்கம் (U.K), திருப்பதி (U.K), காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திரராஜா (U.K), கமலேஸ்வரி (U.K), லக்ஷ்யானி (U.K), காலஞ்சென்ற குமுதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுசியா (U.K), அனித்தா (U.K), அரவிந்தன் (U.K), சிவகரன் (U.K), கவிதன் (U.K), தேனுகா (U.K), சிவதரன் (U.K), தர்சிகா (U.K), தரணிகா (U.K), காலஞ்சென்ற கம்சினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இனிஷா (U.K), அக்ஷா (U.K), வருண் (U.K), நிலா (U.K) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் கதிரிப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
075 980 4854
075 643 4543

**கதிரிப்பாய்**
**அச்சுவேலி.**
(CR/42417) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குஜராத்திடம் தோல்வியை தழுவியது சென்னை

## குஜராத் அணி தனது சொந்த மண்ணில் சென்னையை அபாரமாக வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. துடுப்பெடுத்தாட களமிறங்கிய குஜராத் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கில் மற்றும் சாய் சுதர்சன் இருவரும் சென்னை அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர். ஈவு இரக்கமில்லாது இந்த இணை சென்னையைப் பிளந்து முதலாவது இலக்குக்காக 210 ஓட்டங்களைக் குவித்தது. இருவரும் ஆளுக்கொரு சதம் கண்டனர். இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 231 ஓட்டங்களைப்பெற்றது. பதிலளித்த சென்னைக்கு வழமைபோன்று ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பினர். மத்திய வரிசையில் மொயின் அலி மற்றும் மிர்செல் இருவரும் சிறப்பாகவும் அதிரடியாக ஆடியபோதும் வெற்றி வாய்ப்பு கைமாறியது. மிர்செல் 34 பந்துகளில் 63 ஓட்டங்களையும், மொயின் அலி 36 பந்துகளில் 56 ஓட்டங்களையும் குவித்து வெளியேற சென்னையின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இறுதியில் களமிறங்கிய டோனி 11 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தபோதும் அவராலும் பந்துகள் வீணடிக்கப்பட்டிருந்தது. இறுதியில் சென்னை அணி 8 இலக்குகளை இழந்து 196 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. (ஓ-5)

## சைபர் பாதுகாப்புச் சட்டம்: விரைவில் நடைமுறைக்கு!

தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டத்தை இம்மாதம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளோம். அதற்காக 5 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார். 28 வருடங்களின் பின்னர் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். 'டிஜிற்றல் வியூகத் திட்டம் 2030'க்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. அதில் 6 பிரதான விடயங்களை முன்வைத்துள்ளோம் என்றும் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேலும் தெரிவித்தார். (ச-44)

## காணி விற்பனைக்கு

**சாவகச்சேரி நுணாவில் மேற்கு பேச்சியம்மன்**
கோயில் கண்டி வீதியில் இருந்து
300m தூரத்தில்
**10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**
**இரண்டு பரப்புகளாக பிரித்துக் கொடுக்கப்படும்.**
**077 224 7902**
(CR/42411) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
24
05
1953



மறைவு
09
05
2024

### திருமதி பராசக்தி கந்தசாமிப்பிள்ளை

பெரியமதவடி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி கந்தசாமிப்பிள்ளை 09.05.2024 வியாழக்கிழமை அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தையா-இராசம்மா தம்பதியினரின் பாசமிகு ஏக புதல்வியும், காலஞ்சென்ற சுப்பையா-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், கந்தசாமிப்பிள்ளையின் ஆருயிர் மனைவியும், சிவசக்தி (ஆசிரியை), சிவமதி (பிரான்ஸ்), கிரிசாந்தி (லண்டன்), செந்தூரன் (மின்சார சபை ஊழியர்), ஐங்கரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தகுமார், ரவி, யசோதரன், உதயா, ரஜிந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவினா, பாவனா, மதுராகவன், மதுராதவன், ராகவி, லக்ஷிகா, லதீசன், டனுஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் காலஞ்சென்ற பாலசிவமூர்த்தி, விஷ்ணுமூர்த்தி மற்றும் சிவசுப்பிரமணியம் (சுவிஸ்) என்போரின் அன்புச் சகோதரியும், சுபத்திராதேவி, ஸ்ரீகலாசேனை (சுவிஸ்) மற்றும் அமரர் பொன்னுத்துரை, சிவஞானம் மற்றும் செல்வநாயகம், சிவலிங்கம் என்போரின் அன்பு மைத்துனியும், கிருஷ்ணமூர்த்தி, சாந்தகுமார், சியானி, சிதுர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 12.05.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
சிவசுப்பிரமணியம் : 0041 078 712 3291
ஐங்கரன் : 077 314 4971
நந்தகுமார் : 077 741 6508

## மரண அறிவித்தல்



### விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர்

**(பிரதம குரு, செல்வச்சந்நிதி தொண்டைமானாறு)**

வி.தெய்வேந்திர ஐயர் (பிரதம குரு) அவர்கள் நேற்று (10.05.2024) வெள்ளிக் கிழமை அன்று முருகனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா விசாகரத்தின ஐயர் (பிரதம குரு) - நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஆறுமுகசாமி ஐயர் (பிரதம குரு)- வேதநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும், திருமதி மகேந்திரராணி- சிறிரஞ்சன், ஜெயந்திரன், சசீந்திரன், ரவீந்திரன், காலஞ்சென்ற துஷியேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ச.சிறிரஞ்சன், சசிகலா, ஜெயந்தாதேவி, சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், கபிலன், கஜன், கணேந்திரன், ஹரேந்திரன், யுகேந்திரன், வைஸ்ணவி, மயூரதி, தீபிகா, சுதர்சினி, கிருஷ்ணேந்திரன், சிவனேந்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற நாகேந்திரன், காலஞ்சென்ற திருமதி கு.தேவாம்பிகை, இராஜேந்திரம், பா.விமலாம்பிகை, விஜேந்திரன், யோகேந்திரன், காலஞ்சென்ற லோகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆறுமுகசாமி ஐயர், சிவசண்முக ஐயர் (பிரதம குரு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2024) சனிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 4.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தெய்வேந்திர ஐயர் சசிந்திர ஐயர்**
**077 244 0642**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 466) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கூட்டணிக்குள் ரணிலுக்கு இடமில்லை

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலர் தெரிவிப்பு

கொழும்பு, மே 11

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவையும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தையும் ஒன்றிணைப்பதற்கு எந்தவொரு வெளிநாடும் முற்படவில்லை. ஜனாதிபதி சஜித், பிரதமர் ரணில் என்ற கோரிக்கைக்குக் கூட நாம் உடன்படப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ரணில், சஜித் இணையவேண்டும் என கட்சியில் உள்ள ஓரிருவரே பரிந்துரைக்கின்றனர். ஆனால் அவருடன் இணைவதற்கு எமது கட்சிக்கு எந்தவொரு தேவைப்பாடும் கிடையாது. கட்சியில் உள்ள 95 சதவீதமான உறுப்பினர்கள் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளனர். சஜித்தும் இந்த விடயத்தில் உறுதியாக உள்ளார்.

இரு தரப்பையும் இணைப்பதற்கு வெளிநாடொன்று முற்படுகின்றது என்ற கருத்தையும் நான் ஏற்கவில்லை. எமது கட்சியை வெளிநாட்டால் வழிநடத்தமுடியாது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் 75 இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறுவார்"- என்றார்.

(அ-ம-44)

### சங்கிலி...

னர். கடந்த வாரம் கத்தியைக் காட்டி மிரட்டி தங்கச்சங்கிலியை அறுத்ததாக பெண்ணொருவரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே சந்தேகநபர்கள் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களின் மோட்டார் சைக்கிள் கையகப்படுத்தப்பட்டதுடன் அவர்களிடமிருந்து வாளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலுமொரு சந்தேகநபரை கைதுசெய்ய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ச-26)

### வெப்பச்சாவு...

கடந்த புதன்கிழமை அன்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் கோபாலகுலசிங்கம் (வயது - 68) என்ற வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

மகன் மற்றும் மனைவியைப் பிரிந்து சகோதரர்களுடன் வசித்து வந்த அவர் வீட்டில் யாரும் இல்லாதவேளை வெளிப்பகுதியில் ஆடையற்ற நிலையில் இறந்த சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை சட்ட மருத்துவ அதிகாரி கனகசபை வாசுதேவா உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டார்.

இதன்போது வெயிலில் பல மணிநேரம் வீழ்ந்து கிடந்ததால், கடும் வெப்பத்தின் தாக்கம் காரணமாக உயிர் இழப்பு இடம்பெற்றுள்ளதாக சட்டமருத்துவ அதிகாரி அறிக்கையிட்டுள்ளார்.

கடும் வெப்பம் காரணமாக புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 44 வயதான ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்திருந்த நிலையில் இந்தச் சம்பவமும் பதிவாகியுள்ளது.

இதேவேளை - யாழ். போதனா மருத்துவமனையில் நோய் காரணமாகச் சேர்க்கப்பட்டிருந்த 4 பேர் வெப்பம் காரணமாக ஏற்கனவே உயிரிழந்துள்ளனர் என பொதுமருத்துவ நிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

### டயானாவுக்கு...

அவருக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"டயானா கமகேவுக்கு இரட்டைக்குடியுரிமைகூட இல்லை, அவர் வெளிநாட்டுப் பெண் என்றே எமக்குத் தெரியவருகின்றது. இதுவரைகாலமும் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சட்டவிரோதமாகவே வகித்துள்ளார். 20ஆவது திருத்தச்சட்டத்தை அவர் ஆதரித்தார். கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்தார். அவரின் வாக்கு இல்லாமல் இருந்திருந்தால் பிரேரணை வென்றிருக்கும். போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுள்ள டயானாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பில் சட்டத்தரணிகளுடன் கட்சி கலந்துரையாடி வருகின்றது" - என்றார். (அ-ம-44)

### ஜனாதிபதி...

விரைவில் பெயரிடப்படுவார் எனவும், அந்த அறிவிப்பை மஹிந்த ராஜபக்சவே வெளியிடுவார் எனவும் பஸில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஜனாதிபதித் தேர்தலுக்கு நாம் தயாராகிவிட்டோம். அலுவலகமும் திறக்கப்பட்டுவிட்டது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான எமது கட்சியின் நிலைப்பாடு ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்படும். வேட்பாளர் விரைவில் பெயரிடப்படுவார். ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் கட்சியே முடிவெடுக்கும். இது விடயம் தொடர்பில் தீர்மானம் எடுப்பதைத் துரிதப்படுத்துமாறு தலைமைப் பீடத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். தற்போதைய சூழ்நிலையில் கட்சியைக் கட்டியெழுப்பும் பொறுப்பு நாமலுக்கு வழங்கப்பட்டுள்ளது"- என்றார்.

(அ- 44)

### நுகர்வோர்...

அறவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் யாழ். பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், கடிதம் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் கிடைக்கப்பெற்ற 126 முறைப்பாடுகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ-ஒ-6)

### உடுத்துறையில்...

(வயது - 44) என்பவரே இவ்வாறு சூட்சுமமான முறையில் கழுத்து நெரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

வீட்டின் கழிவறைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த நீர் நிறைந்த கொள்கலன் (பரல்) உள்ளே தலைப் பகுதி இருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார். இது தொடர்பில் கிடைத்த தகவலை அடுத்து மருதங்கேணிப் பொலிஸார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளை சட்ட மருத்துவ அதிகாரி கனகசபை வாசுதேவா மேற்கொண்டார். உயிரிழந்த பெண்ணின் கழுத்தில் துணியைச் சுற்றி சூட்சுமமான முறையில் அவரது கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளமை மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

அதேவேளை - உயிரிழந்த பெண்ணின், பெண்ணுறுப்புக்கு பக்கமாக தொடைப் பகுதியில் நகக் கீறல் காயங்களும் காணப்படுவதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

### தேர்தலை...

தேர்தல் முறையின் கீழ் தென்னிலங்கை அரசியல்வாதிதான் ஜனாதிபதியாக வரப்போகின்றார். யார் வந்தாலும் நாங்கள் பேரம் பேசக் கூடிய தரப்பினராக இருக்கின்றோம்.

தமிழீழ விடுதலை புலிகள் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கச் சொன்ன காரணம் வேறு. அதனையும் இதனையும் ஒன்றாகப் பார்க்கமுடியாது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் புறக்கணிப்பு கருத்தை ஏற்கமுடியாது. அவர்கள் ராஜபக்சக்களின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றார்களா என்றே எண்ணத் தோன்றுகின்றது.

எதிர்வருகின்ற ஜனாதிபதித் தேர்தலை தமிழ்மக்கள் ஒருமித்து எதிர்கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் சார்பிலே பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவேண்டும் - என்றார். (அ-ச-125)

### பொலிஸார்...

பொலிஸார் இளைஞரின் மோட்டார் சைக்கிளை உதைத்ததாலேயே இந்த விபத்துச் சம்பவித்ததாக நேரில் கண்ட பொதுமக்கள் குற்றம்சுமத்தியுள்ளனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த செல்வநாயகம் பிரதீபன் (வயது - 41) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

பலாலி வீதியூடாக குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் உரும்பிராய் நோக்கிப் பயணித்துள்ளார். வசாவிளான் சந்திக்கு அண்மையாக நின்றிருந்த போக்குவரத்துப் பொலிஸார், இளைஞரை நிறுத்துமாறு சைகை செய்ததாகவும், ஆனால் இளைஞர் நிறுத்தாமல் சென்றதையடுத்து பொலிஸார் தமது மோட்டார் சைக்கிளில் இளைஞரை விரட்டிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் வைத்து இளைஞரது மோட்டார் சைக்கிளுக்கு பொலிஸார் காலால் உதைத்ததாகவும், நிலைதடுமாறிய இளைஞர் மின்கம்பத்துடன் மோதியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இளைஞர் உடனடியாக தெல்லிப்பழை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்படும் போதே உயிரிழந்தார் எனவும் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் சம்பவ இடத்தில் கூடிய பொதுமக்கள் பொலிஸாரின் மோட்டார் சைக்கிளை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை - போக்குவரத்துப் பொலிஸார் இருவரும் மதுபோதையில் இருந்ததாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதையடுத்து வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புக்கு அமைவாக, இரு பொலிஸாரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்டமருத்துவ அதிகாரியிடம் நேற்றிரவு முற்படுத்தப்பட்டனர். இதன்போது இருவரும் மதுபோதையில் இருக்கவில்லை என்று மருத்துவப்பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுன்னாகம் பொலிஸாருக்குப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜும் கவனம் செலுத்தியுள்ளார்.

(அ-ஒ-5-26-20-23)

### விடுவிக்கப்பட்ட...

நிலைய வீதி ஊடாகவும், ஒட்டகப்புலம் பிரதான வீதியூடாகவும் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குச் செல்ல ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை கோரி பதிவு செய்துள்ளதுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி துப்புரவு செய்யும் பணிகளையும் ஆரம்பித்துள்ளனர்.

(அ-ஒ-26)

### வீட்டில்...

பட்ட நடவடிக்கையின்போது, சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்திரகாளி கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் கஞ்சாச் செடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 8 அடி உயரத்துக்கு அந்தச் செடி வளர்ந்துள்ளது.

அந்தச்செடியை வளர்த்த குற்றச்சாட்டில் வீட்டின் உரிமையாளரான 46 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார். அவர் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (அ-ம-26-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கட்டளைத்தளபதி கச்சேரியில் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 11

புதிதாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட 51 ஆவது படைப்பிரிவின்இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜனக விமலரத்ன நேற்று வெள்ளிக் கிழமை முற்பகல் மரியாதை நிமித்தமாக யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபனை யாழ்.மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் மேலதிக மாவட்டச் செயலர் (காணி) ப.சிறிமோகனனும் பங்கேற்றார். (ஒ-66)


## காணி விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் வடக்கு (GG பொன்னம்பலம் வீதி) பலாலி வீதியில் இருந்து 200m தூரத்தில் 3 வது காணி 27 பரப்பு தோட்டக்காணி 5 அறை வீட்டு அத்திபாரத்துடன் விற்பனைக்கு உண்டு.

**தரகர் தேவை இல்லை**

தொடர்பு: **076 877 5021**

(CS 464) V-1

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: **074 173 7684**

(CS/54971) J-1

## தாதியர் தேவை



யாழ்நகரில் இயங்கிவரும்

**பல் வைத்திய நிலையத்துக்கு**

- கல்வி :- GCE A/L முடித்தவர்களுக்கு தாதியர் பயிற்சி எடுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- வயது :- 18 - 22 வயதுக்கிடைப்பட்ட திருமணமாகாத பெண்கள்
- சம்பளம் :- Rs. 30000 - 45000 இற்கு இடையில் அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

குறிப்பு: தங்குமிட / Hostel வசதியுண்டு.

தொடர்பு: இயக்குநர் **077 758 8729**

(CS 55026) N-1

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

தொடர்பு :- **077 886 2927**

(CS/375) J-1

## வேலையாள்கள் தேவை

தெல்லிப்பழையில் இயங்கும் சிமெந்து சம்பந்தமான தொழிற்சாலைக்கு வேலை ஆள்கள்தேவை.

**077 996 5893**

(CS55008) N-1

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

### A/L தொழில்நுட்ப பிரிவு

### புதிய பிரிவு A/L 2026

- திகதி - 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் - காலை 8.30

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரம் கொண்ட ஒரே ஒரு கல்வி நிறுவனம்

தொடர்புகளுக்கு: **077 017 5346**

(In.21023) (N-1)

## கால்நடைகள் வளர்ப்போருக்கு

இந்தியா மற்றும் சீனாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட பால் கறக்கும் மெசின் (Milking Machine), பால் சேகரிக்கும் கொள்கலன் (Milk Can) 5 லீற்றரில் இருந்து 40 லீற்றர் வரையான அளவுகளில் சில்வர் (SS304) மற்றும் அலுமினியத்தினாலானவை இப்பொழுது எம்மிடம்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



**ஆர்க் .என். கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020




**Hotline: 071 535 7799 / 071 973 9917**

(CS 55020) (N-1)

## வீட்டுப் பணிப்பெண் தேவை


பகல் நேரம் மட்டும். பணியிடம்-வதிரி வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. நல்ல சம்பளம், வேலை நேரம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 662 9868**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 02 . 09 . 1947

மறைவு 11 . 04 . 2024



### அமரர் சின்னத்துரை மகேந்திரன்

**(முன்னாள் பண்டத்தரிப்பு கிராமிய வங்கிச்சேவை முகாமையாளர், முன்னாள் வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர், முன்னாள் வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர், பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், கலைமகள் சனசமூக நிலைய தலைவர்)**

எங்களது குடும்ப ஆலமரமாக இருந்த எங்கள் தெய்வம், எங்களை தவிக்கவிட்டு விண்ணகம் சென்ற எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய பெரியவளவு முருகனையும், பெரியவளவு முத்துமாரியம்மனையும் வேண்டி நிற்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் நாளை (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை 11.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பைத் தயவு செய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மூலம் எங்கள் குடும்ப துயரத்தில் பங்கெடுத்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அவரின் நினைவாக முன்பள்ளியில் ஆழ்துழை கிணறு அமைத்து பெயர் மற்றும் புகைப்படம் பொறித்த, நினைவுக் கல்வெட்டு அமைத்த பிரான்பற்று கிராம பசுமைத் திட்டத்தினருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சண்டிலிப்பாய் வீதி,**
**பிரான்பற்று, பண்டத்தரிப்பு.**


குடும்பத்தினர்
077 432 9354

(CS/452) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1938

மறைவு 09 . 05 . 2024



### தொழிலதிபர் A.K.துரைரட்ணம்

சாவகச்சேரி, கோவில் குடியிருப்பு கந்தையா வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தொழிலதிபர் A.K. துரைரட்ணம் (A.K.S. நிறுவனம்) அவர்கள் நேற்றுமுன்தினம் (09.05.2024) வியாழக்கிழமை சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் கந்தையா - செல்லம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீமதியின் பாசமிகு கணவரும், ஸ்ரீலவன் (லண்டன்), ஸ்ரீரங்கன் (லண்டன்), துசித்தா (லண்டன்), ஸ்ரீசுடரோன் (இயக்குநர் Bridge Academy PVT-Ltd இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மைதிலி, துஷ்யந்தி, சிவசுரதன்,கவிதா ஆகியோரின் மாமனாரும், ஹரிஷ்கோபி, ஸ்ரீநிகேதன், பிரதன்யா, வைஷாலி, வாகீஸ், அக்ஷோபன், ஆகர்ஷா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற A.K சுந்தரம் மற்றும் A.K சபாரத்தினம், நாகரத்தினம் பரமகுரு, காலஞ்சென்ற A.K இராசையா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்வலட்சுமி, பூங்கோதை, பரமகுரு மற்றும் சுமதினி, காலஞ்சென்றவர்களான மீனாம்பிகை, திலகவதி மற்றும் சிவகுமாரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆரம்பமாகி 9.00 மணியளவில் தகனக்கிரிகைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**0777 283 772**

(CR 42406) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.